

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தேவி,முத்து இல்லத் திருமண விழாவை மாவட்டச் செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை ஏற்று நடத்திவைத்து மணமக்கள் எம்.பொன்சங்கர்,எம்.சங்கிதா ஆகியோரை வாழ்த்தினார். மாநில மருத்துவரணி துணை செயலாளர் டாக்டர் ஆர்.அண்ணாமலை, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினருமான ரெ.தங்கம், ஒன்றிய செயலாளர் அழகு. சிதம்பரம், திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் (ஒன்றிய பெருந்தலைவர்) கேபிகே.டி.தங்கமணி, புதுக்கோட்டை ஒன்றிய செயலாளர் ஆர்.ராமகிருஷ்ணன் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், பெரி.பன்னீர்செல்வம், ராஜா சரவணன், ஆறுமுகம்,பாத்திமா மற்றும் கழக நிர்வாகிகள பங்கேற்றனர்.

### பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் வடக்கு ஒன்றிய தி.மு.க.சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம்!

### ஒன்றியச் செயலாளர் தி.மதியழகன் தலைமை வகித்தார்! மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூன் 21 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, வேப்பூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், அத்தியூர் கிராமத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. விஜய் டி.வி.புகழ் செந்தில் கணேஷ் ராஜலெட்சுமி இன்னிசைக் கச்சேரியுடன் துவங்கிய கூட்டத்திற்கு, ஒன்றிய கழக செயலாளர் தி.மதியழகன் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு, அத்தியூர் கிளைச் செயலாளர் எம்.ராஜராஜன் வரவேற்புரையாற்றினார். ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் எஸ்.சுந்தர்ராஜ், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை ஒன்றிய அமைப்பாளர் ஆர்.துரைமுருகன், கிளைச் செயலாளர்கள் எம்.தனபால், பி.கருப்பையா, பி.பழனிவேல், முன்னாள் ஊராட்சி செயலாளர் பி.லெனின், ஆசிரியர் ஆர்.தனராஜன், முன்னாள் ஊராட்சி பிரதிநிதி டி.இளங்கோவன், எ.எஸ்.பழனிவேல்,

இளைஞர் அணி எஸ்.கலையரசன், அ.பால முருகன் மற்றும் ஆர்.சரவணன் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி.எஸ்.பெரியசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டுச் செல்வி ராஜேந்திரன், எஸ்.அண்ணாதுரை,

மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத், பெரம்பலூர் ஒன்றிய செயலாளர் எம்.ராஜ்குமார், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், வேப்பூர் ஒன்றிய பெருந்தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன்,

லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி தலைவர் ஏ.எஸ்.ஜாகிர்உசேன், பேரூராட்சி துணைத் தலைவர் அ.ரசூல்அகமது, ஒகளூர் ஊராட்சி மன்றத் தலைவர் கு.க.அன்பழகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.பிரபாகரன், மாவட்ட தொண்டர் அணி தலைவர் பெரு. கருப்பையா, விவசாயத் தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் எம்.ஏ.செல்வராஜ், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் அ.மெய்யன்துரை, ஒன்றிய அவைத் தலைவர் பி.கருணாநிதி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் அ.கௌதமன், ஆர்.பழனிச்சாமி, கனிமொழி பன்னீர் செல்வம், ஒன்றிய பொருளாளர் சிவ.செல்வராஜ்,

மாவட்ட பிரதிநிதிகள் எம்.சண்முகம், எஸ்.பி.ஆர்.செல்வராஜ், டி.பழனிவேல், எஸ்.அழகுவேல், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் எம்.தேவராஜன், வை.தேசிங்குராஜன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ்.ஜெயராமன், கலை இலக்கிய பேரவை மாவட்ட துணை அமைப்பாளர்கள். கே.கணேசன், தர்ம.பூபதி, சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் அ.சம்சுதீன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்பி.காமராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கே. அசோக்குமார், மகளிர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் தனலெட்சுமிசேகர், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்பி.வீரமுத்து, விவசாய தொழிலாளர் அணி என்.புகழேந்தி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஏ.கே.ஜி.பழனி வேல், ஆண்டாள் குடியரசு, ஜே.தேவராஜன், மலர்க்கொடி கருணாநிதி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் பி.சுரேஷ், சி.சின்னு, ராஜேஸ்வரிராஜ்குமார், சாந்தி செல்வராஜ்,


வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, வேப்பூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.அன்புச்செல்வன், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமி கருணாநிதி, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கவியரசன்,

விழா குழுவினர் என்.ரவிச்சந்திரன், சி.சின்னதுரை, சி.பன்னீர்செல்வம், அ.பரமசிவம், அ.ராஜேந்திரன், எஸ்.தங்கவேல், டி.அண்ணாதுரை, என்.கொளஞ்சி, எம்.முகமதுஷரீப், எஸ்.பால்ராஜ், எல்.ராமகிருஷ்ணன், ஆர்.வெங்கடேசன், பி.இளையராஜா, பசும்பலூர் கிளைச் செயலாளர் ஆர்.ஜெயபால் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அத்தியூர் கிளைச் செயலாளர் அ.முருகேசன் நன்றியுரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி
### ஜூன் 21 (2009)



தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற 'கறுப்புச் சட்டை மாநாட்டில்' பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மோடியின் ஆட்சிச் சரக்கு இரயில் நகருமா?


**கோ**வை பல்லடத்திலும், நெல்லையிலும் கலந்து கொண்டு பேசிய மோடி, தனது 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியின் சாதனைகள் பற்றிப் பேசுவதை தவிர்த்து விட்டு, ...தேர்தலுக்குப் பின்னர் தி.மு.க.வை நீங்கள் காண முடியாது... என்று கூச்சல் போட்டு பேசினார். ஆனால் பா.ஜ.க. 40 தொகுதியிலும் தமிழ்நாட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டு கல்லறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு செய்த நலத்திட்டங்கள் பெரிய அளவில் வெற்றிக்கான முடிவு செய்திருக்கின்றன. தேர்தல் பரப்புரையில் இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வேகம் புயலென உருவெடுத்து வலு சேர்த்திருக்கிறது.

கலைஞருக்குப் பிறகு கழகத்தின் தலைவராகத் தளபதி 2018 ஆகஸ்ட் 28 இல் பொறுப்பேற்றார். அதன் பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களில் எல்லாம் வெற்றிகளைக் குவித்து வருகிறார். 2019 ஏப்ரல் 18 இல் நடந்த மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் 39 தொகுதிகளில் 38 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி அபார வெற்றி பெற்று சாதனை படைத்தார். 2020 ஜனவரி 3ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க கூட்டணி அதிக இடங்களில் வெற்றிக்கனிகளைப் பறித்தது. 2021 மே 2ல் நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி 159 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு தனிப் பெரும்பான்மையாக தி.மு.க. 133 இடங்களைப் பெற்று மே 7 இல் தளபதி தலைமையிலான ஆட்சி உருவாகிடக் காரணமாயிற்று.

2022 பிப்ரவரி 22 அன்று நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மாபெரும் வெற்றியை தி.மு.க. கூட்டணி பெற்றது. 2023 பிப்ரவரி 22 ஆம் தேதி நடைபெற்ற ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் காங்கிரசுக் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் வெற்றி பெற்று சாதனை படைக்க வைத்தார் தளபதி. தற்போது 2024 ஜூன் 4 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 இடங்களை தி.மு.க. கூட்டணி கைப்பற்றி மாபெரும் வரலாற்று சாதனை படைத்துள்ளது. இது கலைஞர் அவர்களால் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 2004 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சாதனையைப் போல், அவரின் திருமகனான தளபதியாரால் வெற்றித் தூண் நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

400 இடங்களுக்கு மேல் பா.ஜ.க வெற்றி பெறும் என்று நாடாளுமன்றத்திலும், தேர்தல் பரப்புரைகளிலும் ஹிட்லராக மாறிக் கொக்கரித்தார் மோடி. அமித்ஷா ஆர்ப்பரிக்கும் அலை கடலாக மாறி ஆட்டம் போட்டார்! இன்று நிலைமை என்ன ஆயிற்று? பா.ஜ.க. ஆட்சிக்குப் பல்லக்கு தூக்க வேண்டிய ஆட்கள் தேவைப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளைப் பார்த்து, இனிமேல் வேண்டுமானால், நாடாளுமன்றப் பார்வையாளர் மாடங்களில்தான் நீங்கள் அமர்வீர்கள் என்று மோடி, அமித்ஷா கூட்டம் கிண்டலாக, கேலியாகக் கூறியது. வெறிபிடித்த ஓநாய் போல ஓலமிட்டுக் கத்திய அந்தக் காட்டுக்கூச்சல் என்னவாயிற்று? இன்று ஆட்சி அமைப்பதற்கு 272 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையென்று இருந்த போதும்; அதனையே எட்ட முடியாமல் 240 பேர் மட்டுமே பா.ஜ.க. பெற்றிருக்கிறதே?.. சந்திரபாபு நாயுடுவின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட தெலுங்குத் தேசக் கட்சி, நிதிஷ் குமாரின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய ஜனதா தளக் கட்சி ஆகிய இரு சக்கரங்கள் இருந்தால்தான் மட்டும் போதாது! சிவசேனா (ஷிண்டே ) கட்சி, இராஷ்டிரியா லோக் தளம் போன்ற மற்ற கட்சிகளின் அச்சாணி மசவு எண்ணெய் இருந்தால்தான் மோடி வண்டி இனி நகர முடியும் என்ற பெருத்த அவலநிலை ஏற்பட்டு இருக்கிறது அல்லவா! மக்கள் சக்தி எவ்வளவு பெரிய சக்தி என்பது நிரூபித்துக் காட்டி இருக்கிறது! மோடியே வாரணாசியில் வழுக்கி விழுந்து தப்பித் தவறி எழுந்து வந்திருக்கிறார் என்பதுதானே உண்மை!

**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



2014 தேர்தலில் 282 இடங்களையும், 2019 தேர்தலில் 302 இடங்களையும் தனிப் பெரும்பான்மையாக பா.ஜ.க. பெற்று டெல்லியில் செங்கோட்டையில் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி பீடம் ஏறியது. ஆனால், மக்களின் நம்பிக்கையைத் தகர்த்ததுடன், கடந்த 10 ஆண்டுகளாக நரேந்திரமோடி, மக்களாட்சி தத்துவத்தையே சீர்குலைத்துச் சர்வாதிகாரப் பாதையில் மாற்றிப் பாசிச ஆட்சியாக நடத்தி வந்தார். வருமானவரித்துறை அமலாக்கத்துறை, சி.பி.ஐ., புலனாய்வுத்துறை, தேர்தல் ஆணையம், நீதித்துறை போன்றவற்றில் தலையிட்டு அழுத்தம் கொடுத்து வந்ததுடன், அவற்றின் மூலம் தனது சர்வாதிகாரப் போக்கை மோடி ஆட்சி நடத்தி வந்தது. அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் எல்லாம் அம்பானி, அதானி கும்பல்களுக்குத் தாரைவார்க்கப்பட்டன. இந்திய மக்களின் வரிப்பணம் 0அனைத்தும் களவாணிக் கூட்டமான கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்கு அள்ளி வழங்கப்பட்டது. அன்றாடங்காய்ச்சிகளான ஏழை. எளிய மக்களின் கல்விக் கடனோ, விவசாயக் கடனோ, மருத்துவக் கடனோ தொழில் கடனோ இரத்து செய்ய முன்வராத மோடி அரசு, வங்கிகளில் சேமிப்புப் பணமாகப் போடப்பட்டிருந்த மக்களின் வேர்வைப்பணத்தைச் சூறையாடி, கார்ப்பரேட் முதலாளிகளுக்குக் கடன் பேரில் வழங்கப்பட்ட சுமார் 25,000 இலட்சம் கோடிகளுக்கு மேல் இரத்து செய்யப்பட்டது.

பொருளாதார வீழ்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவற்றைப் பற்றிக் கவலைப்படவில்லை. தங்களது ஆட்சிச் சாதனைகள் பற்றி விளக்கித் தேர்தல் பிரச்சாரம் செய்ய முன்வராத மோடி அமித்ஷாக்கள், எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காக ஆட்சியை பயன்படுத்தினர்.தேர்தல் நேரத்தில் டெல்லி முதல்வர் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த அரவிந்த் கெஜ்ரிவால், சட்டீஸ்கர் முதல்வர் சிபு சோரன் போன்றோரைச் சிறையில் தள்ளித் தேர்தல் பிரச்சாரம் செய்ய விடாமல் ஈனப்புத்தியைப் பயன்படுத்தியது பா.ஜ.க.

அரசியல் எதிரிகளைப் பழி வாங்கியது; தங்களுக்கு வேண்டாத மாநிலங்களில், பா.ஜ.க.வின் கைத்தடிகளாக நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் மூலம் தொல்லை, தொந்தரவு கொடுத்தது; அமைச்சரவை ஒப்புதல் தந்து, சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள், சட்டங்களுக்கு அனுமதி தராமல் கிடப்பில் போட்டிருப்பது; மாநில உரிமைகளைத் தட்டிப் பறித்துக் காலில் போட்டு மிதித்தது; மாநிலங்களுக்குத் தர வேண்டிய நிதியைத் தராமல் கருவூலக் கதவுகளை மூடிக்கொண்டது. அரசியல் அமைப்புச் சட்ட பிரிவுகளை அவமதித்தது என்பன போன்ற ஆணவப் போக்குடன் நடந்து கொண்டவைதான் கடந்த கால மோடி அரசின் சான்றுகளாகும்!

ஜூன் 9 அன்று பிரதமராக மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பதவி ஏற்றார். அவரது அமைச்சரவை கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறது. ஏனென்றால், இந்திய வரலாற்றில் முதல்முறையாக பிரதமர் நரேந்திர மோடியின் 3.0 ஆட்சியில் இஸ்லாமியர்களுக்கு ஒருவர் கூட இல்லாமல் ஒன்றிய அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. கூட்டணியில் உள்ள பிற கட்சிகளின் 52 நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் பா.ஜ.க. ஒன்றியத்தில் ஆட்சி அமைத்துள்ளது. கடந்த 2014 இல் மாநிலங்களவை எம்.பி. ஆக இருந்த நஜ்மா ஹப்துல்லா சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சராக செயல்பட்டார் . 2019 இல் மோடி ஆட்சியில் முக்தார் அப்பாஸ் நக்வி சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 2022 ஆம் ஆண்டில் கழற்றி விடப்பட்டார். இடையில் முஸ்லிம் அமைச்சர்கள் யாரும் இல்லை. தற்போது மோடி அமைச்சரவையில் ஒருவர் கூட இஸ்லாமியர் அமைச்சர் பொறுப்பு வழங்கப்படவில்லை. தேர்தலில் போட்டியிடவும் பா.ஜ.க. எப்போதும் போல், இஸ்லாமியருக்கு வாய்ப்பும் வழங்க வில்லை. எனினும், மக்களவைத் தேர்தலில் இஸ்லாமியர்கள் 24 பேர் எதிரணியில் உள்ளனர். இதில் இந்தியா கூட்டணியில் மட்டும் 21 பேர் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளனர் என்பது நினைவு கூரத்தக்கது.

மோடி அமைச்சரவையில் மாநிலங்கள் அவை உறுப்பினர் என்ற நிழலில் குளிர் காய்ந்து வரும் நிர்மலா சீதாராமன்கள், ஜெய்சங்கர்களுக்கு ஒரு நீதி; அதே வேளையில், வெயிலிலும் மழையிலும் அலைந்து திரிகிற சூத்திர சாதியினருக்கு ஒரு நீதி என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தமிழ்நாட்டில் பா.ஜ.க. வளரவில்லை. மோடி எட்டு முறை பிரச்சாரம் செய்தும் கடந்த தேர்தலில் விட வாக்குகள் குறைவுதான் என்பதே உண்மை. அண்ணாமலைகள், தமிழிசைகள், வானதி சீனிவாசன்கள் போன்ற வாய்ச்சவடால்கள் இங்கு எடுபடவில்லை. ஒன்றியத்தில் பி.ஜே.பி.க்குத் தனி பெரும்பான்மை கிடைக்காதது ஏன்? என்பதைச் சொல்லி ஆக வேண்டும்! தமிழ்நாட்டில் போட்டியிட்ட 19 மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட 114 சட்டமன்றத் தொகுதிகளில் எந்தத் தொகுதியிலும் பா.ஜ.க. முன்னிலை இல்லை. நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளிலும் மண்ணைக் கவ்வினர் என்பதுதான் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல் வரலாறு.

மே 7 அன்று நடைபெற்ற மூன்றாம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவுடன் மக்களவை இடங்களில் பாதி இடங்களுக்குத் தேர்தல் முடிந்த நிலையில் முதலில் சொன்ன புள்ளி விவரத்திற்கும் இறுதியில் சொன்ன புள்ளி விவரத்திற்கும் இடையே ஆறு விழுக்காடு உயர்வு இருக்கிறது. வழக்கத்திற்கு மீறிய காலதாமதம் ஏன்? இது எப்படி ஏற்பட்டது? இந்த ஒப்பீடுகள், தரவுகள் மோசடியானவை என்று கூறியும் தேர்தல் ஆணையம் கண்டு கொள்ளவில்லை.

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டம் தில்லியில் பழைய நாடாளுமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற போது, நாடாளுமன்றக் கட்சியின் தலைவராக நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் கலந்து கொண்ட அக் கூட்டத்தில், நரேந்திர மோடி கூட்டத்திற்கு வந்ததுமே அரசியல் அமைப்புச் சட்ட புத்தகத்தைத் தொட்டு நெற்றியிலே வைத்து வணங்கிப் பின்பு இருக்கையிலே அமர்ந்தார். பிரதமர் மோடி இந்த நாடகத்தை மிக அற்புதமாக நடத்தி முடித்திருக்கிறார். இந்தியா கூட்டாட்சி ஜனநாயகம் சமயசார்பின்மை என்கின்ற 42 ஆவது அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவின் சொற்களை ஏற்காத பா.ஜ.க., புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறந்து போதும் அப்பகுதியிலே அரசியல் அமைப்புச் சட்ட முகப்புரையில் உள்ள பகுதிகளை நீக்கிவிட்டுத் தான் கொடுத்திருந்தது. அதைப்போல 2015 ஆம் ஆண்டு ஜனவரி 26 குடியரசு தினத்தன்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஒபாமாவுடன் மரியாதை செய்து நின்ற போது, ஒன்றிய அரசின் அணி வகுப்பு வண்டிகளில் விளம்பரம் செய்யப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம் முகப்புரையின் ஒருபகுதியை நீக்கிவிட்டு வந்தது. அது கடும் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளானது.

பொதுசிவில் சட்டம், அக்னி வீர், ஒரே நாடு ஒரே தேர்தல், சாதிவாரி கணக்கெடுப்பு போன்ற பா.ஜ.க.வின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்பதை மோடி உணர வேண்டும்.

மோடியின் சர்வாதிகார ஆட்சித் தேருக்கு நடைபெற்ற தேர்தல்கள் மூலம் முட்டுக்கட்டை போடப்பட்டிருக்கிறது. இதனையொட்டி கோவை மாநகரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் தளபதி ஸ்டாலின் மற்றும் இந்தியக் கூட்டணி தலைவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் எதிர்கால அரசியலை ஜனநாயகப் பாதையில் கொண்டு செல்ல வழிகாட்டியிருக்கிறது.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலையடுத்து விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் முட்டத்தூரில் நடைபெற்ற நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்றது. உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.